# முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எச்சரிக்கை!

## முதல் பக்கத் தொடர்ச்சி

ஒன்றியத்தில் ஆட்சி செய்யும் கட்சியை மாநிலத்திலும் தேர்வு செய்யாவிட்டால் மாநிலத்திற்கான நிதி கிடைப்பதில் சிரமம் ஏற்படும் என என மக்களை மறைமுகமாக மிரட்டும் வகையில் உள்ளதாகவும் அவர் விமர்சித்துள்ளார். மாநில அரசுகள், ஒன்றிய ஆளும் கட்சியின் நன்மதிப்பையோ, தயவையோ நம்பி இருக்கும் நிலை இந்திய அரசியலமைப்பில் இல்லை என்றும் மாறாக, ஒன்றியமும் மாநிலங்களும் தங்களின் அதிகார வரம்புகளுக்குள் இணைந்து செயல்படும் ஒரு கூட்டாட்சி அமைப்பையே அரசியல் அமைப்பு உருவாக்கி உள்ளதாக அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

டெல்லியில் ஆட்சி செய்யும் கட்சியால் ஆளப்படும் மாநிலங்களை மட்டுமின்றி ஒட்டுமொத்தக் குடியரசையுமே ஒன்றிய அரசு பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். தேசிய வரிவிதிப்பின் மூலம் திரட்டப்படும் நிதி ஒன்றிய ஆளும் கட்சிக்கானதல்ல, அது இந்திய ஒன்றிய அரசுக்கே சொந்தமானது, மக்கள் எப்படி வாக்களித்திருந்தாலும், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், குடியரசின் பெயராலேயே அவர்களிடம் வரிகள் வசூலிக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டி உள்ள எஸ்.ஒய். குரேஷி, மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வு ஒரு மாநிலத்தை எந்தக் கட்சி ஆட்சி செய்கிறது என்பதன் அடிப்படையில் இருக்கக் கூடாது என்று வலியுறுத்தி உள்ளார்.

### நிதி ஆணையம் பரிசீலிக்க வேண்டும்!

மக்கள் தொகை அடிப்படையிலான நிதிப் பகிர்வு, மக்கள்தொகையை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய தென் மாநிலங்களுக்கு பாதகமாக அமையக்கூடும் என்பதால், இதுகுறித்து நிதி ஆணையம் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். வளர்ச்சி என்பது அரசியல் சார்புடையதாக இருக்கக் கூடாது, மாறாக, அனைத்து மாநிலங்களையும் ஒவ்வொரு குடிமகனையும் சமமான நியாயத்துடன் நடத்தும் விதிகளின் அடிப்படையிலேயே அது அமைந்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ள முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.ஒய். குரேஷி ஒரே ரயிலை எத்தனை என்ஜின்கள் இழுத்துச் செல்கின்றன என்பதைவிட இந்தியாவின் கூட்டாட்சி ஜனநாயகத்தை காப்பாற்றும் ஒற்றை என்ஜின்தான் மிகமுக்கியம் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட - மாவட்ட துணை - தொகுதி நிர்வாகிகள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

**வேலூர் வடக்கு மாவட்டம்**

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - திரு.முருகானந்தம்
மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் - திரு. பி. செல்வகுமார் (கே.வி.குப்பம் - களப்பணி)
திரு. கோகுல் அஷ்வின் (காட்பாடி - களப்பணி)

**காட்பாடி சட்டமன்ற தொகுதி**

காட்பாடி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:
களப்பணி - திரு. ஏ. முத்து
சமூகவலைத்தளம் - திரு. எஸ். வினோத்
மகளிர் - திருமதி. எச். ஞானாம்பாள்

**கே.வி.குப்பம் சட்டமன்ற தொகுதி**

கே.வி.குப்பம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:
களப்பணி - திரு. ஆர். முரளி
சமூகவலைத்தளம் - திரு. எஸ். பரந்தாமன்
மகளிர் - திருமதி. வி. சத்யா

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23.03.2026

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

## கொரோனா காலத்தில் பழனிசாமியின் கேவலமான ஆட்சிக்கு சாத்தான்குளமே சாட்சி!

# பொய் சொல்லி குற்றவாளிகளைக் காப்பாற்ற முயன்ற எடப்பாடி - பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

**சென்னை, மார்ச்.24-**

**அமைச்சர் எஸ்.ரகுபதி, நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில், "கொரோனா காலத்தில் பழனிசாமியின் கேவலமான ஆட்சிக்கு சாத்தான் குளமே சாட்சி!" என்றும் - "பொய் சொல்லி குற்றவாளிகளைக் காப்பாற்ற முயன்ற எடப்பாடி பழனிசாமி பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சாத்தான்குளம் தந்தை ஜெயராஜ் மகன் பென்னிக்ஸ் கொலை வழக்கில் 9 போலீஸாரும் குற்றவாளிகள் என 6 ஆண்டுகளுக்குப் பிறகு தீர்ப்பு அளித்திருக்கிறது மதுரை கூடுதல் அமர்வு நீதிமன்றம்.

எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் 13 அப்பாவிகள் துள்ளத் துடிக்கக் கொல்லப்பட்டதற்கு அடுத்து நடந்த பெரிய வன்முறை, சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு. 2020ஆம் ஆண்டு சாத்தான்குளத்தில் செல்போன் கடை வைத்திருந்த தந்தை ஜெயராஜ், மகன் பென்னிக்ஸ் இருவரின் அதிர்ச்சி மரணங்கள் தமிழகத்தைத் தாண்டி உலகளவில் அதிர்ச்சி அலைகளை உண்டாக்கியது.

### கொடூர மனித உரிமை மீறல்!

அவர்கள் கொல்லப்பட்டதற்கு முந்தைய மாதம்தான் அமெரிக்க போலீஸாரால் ஜார்ஜ் ஃபிளாய்ட் கொல்லப்பட்டார். அதற்காக உலகம் முழுவதும் அனைத்துத் தரப்பு மக்களும் கைகோத்துப் போராடினார்கள். அதற்கு இணையான ஒன்றாக மனித உரிமை கொடூரமாக சாத்தான்குளம் சம்பவம் பேசப்பட்டது. இந்தியா முழுக்க சாமானியர்கள் தொடங்கி, பிரபலங்கள் வரை கண்டங்களைத் தெரிவித்தார்கள்.



சாத்தான்குளம் சம்பவத்தை 'இரட்டைப் படுகொலை' என்று விமர்சித்த அன்றைய எதிர்க் கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காவல்துறையினர் மீது கொலை வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று தொடர் அழுத்தம் கொடுத்தார். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்குத் தேவையான அனைத்துச் சட்ட உதவிகளையும் திமுக வழங்கும் என்று உறுதியளித்து, சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி ஆரம்பக் கட்டத்திலேயே குரல் கொடுத்தார். ஜெயராஜ், பென்னிக்ஸ் குடும்பத்தினருக்கு திமுக சார்பில் ரூ. 25 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

இத்தனைக்கும் ஜெயராஜும் பென்னிக்ஸும் குற்றவாளிகள் அல்ல. 'கொரோனா ஊரடங்கு நேரத்தில் விதியை மீறிக் கடையைத் திறந்து வைத்திருந்தார்கள்' என்பதுதான் அவர்கள் மீதான எடப்பாடி பழனிசாமி காவல் துறையின் குற்றச்சாட்டு. இப்போது மூச்சுக்கு முந்நூறு தடவை, "கொரோனா காலத்திலும் சிறப்பான ஆட்சியைக் கொடுத்தோம்" என மார்தட்டுகிறாரே எடப்பாடி பழனிசாமி. அந்தக் கொரோனா காலத்தில்தான் ஜெயராஜ், பென்னிக்ஸ் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டன. கொரோனா காலத்தில் பழனிசாமியின் சிறப்பான ஆட்சிக்கு சாத்தான்குளமே சாட்சி!

கொத்தாகக் காவல்துறையினரால் பிடித்துச் செல்லப்பட்ட இருவரும், காவல் நிலைய விசாரணைக்குப் பிறகு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், சில மணி நேரத்தில் இருவருமே அடுத்தடுத்து இறந்து போக, 'உடல்நலக்குறைவு 'என்று வழக்கமான காரணத்தைச் சொல்லிக் கதையை முடிக்கப் பார்த்தது அன்றைக்கு ஆட்சியில் இருந்த எடப்பாடி பழனிசாமி அரசு.

### அ.தி.மு.க. ஆட்சியில் பலியான அப்பாவிகள்!

2020 ஜூன் 22ஆம் தேதி ஜெயராஜும் பென்னிக்ஸும் இறந்தார்கள். இரண்டு நாள் கழித்து 24ஆம் தேதி அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி அது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில், 'சிறையில் இருந்த பென்னிக்ஸ் தனக்கு மூச்சுத்திணறல் ஏற்படுவதாகச் சொன்னதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார். சிறையில் இருந்த ஜெயராஜ் தனக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்ததையடுத்து, மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்' எனக் குறிப்பிட்டார். போலீஸாரால் கொல்லப்பட்டவர்களை 'மூச்சுத்திணறல் - உடல்நலக்குறைவு' என முதல்வரே பொய் சொல்லிக் காவல் துறையினரைக் காப்பாற்றினார். பாதிக்கப்பட்ட ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இரண்டு அப்பாவிகளை நோயாளி ஆக்கிய மனசாட்சி இல்லாத மனிதர்தான் எடப்பாடி பழனிசாமி. மாபாதகச் செயலைச் செய்துவிட்டு, கூச்சமே இல்லாமல் பச்சைப் பொய் சொன்னார் பழனிசாமி. 'உடல்நலக்குறைவு' என்று காரணத்தைச் சொல்லிக் கதையை முடிக்கப் பார்த்தது எடப்பாடி அரசு. காவல்துறையினர் நடத்திய கொலை வெறித் தாண்டவத்திற்கு ஆதரவு அளித்தவர்தான் பழனிசாமி.

எடப்பாடி பழனிசாமியின் நடவடிக்கையைக் கடுமையாக எதிர்த்ததோடு பாதிக்கப்பட்டக் குடும்பத்திற்கு ஆதரவாக மக்களோடு இணைந்து போராடியது திமுக. சாத்தான்குளம் கொடூரக் கொலைச் சம்பவத்தில் இன்றைக்கு நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. அதிமுக ஆட்சியில் மூடி மறைக்க நினைத்த வழக்கில் இன்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததன் மூலம் 'மூச்சுத்திணறல் - உடல்நலக் குறைவால்தான் உயிரிழந்தனர்' என பழனிசாமி சொன்ன அபாண்டப் பொய்யை வெட்ட வெளிச்சமாக்கி விட்டது. குற்றவாளிகளைக் காப்பாற்ற அன்று பொய் சொன்ன பழனிசாமியும் ஒருவகையில் குற்றவாளிதான். பொய் சொல்லி குற்றவாளிகளைக் காப்பாற்ற முயன்ற எடப்பாடி பழனிசாமி பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் — 2026

# வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களின் கைபேசி ஒப்படைக்கும் வசதி!

## தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி தகவல்!

*சென்னை, மார்ச் 24-*

வாக்காளர்களின் வசதியை உறுதி செய்யவும், மேம்பட்ட வாக்குப்பதிவு அனுபவத்தை வழங்கவும் இந்திய தேர்தல் ஆணையம் பல முன்முயற்சிகளை எடுத்துள்ளது.

வாக்காளர் தகவல் சீட்டை (Voter Information Slip) மேலும் எளிதாக்கும் வகையில், அதில் வாக்காளரின் வரிசை எண் மற்றும் பாகம் எண் ஆகியவை தெளிவாகத் தெரியும் வண்ணம் தேர்தல் ஆணையம் மாற்றியமைத்துள்ளது. இதன் மூலம் வாக்காளர்கள் தங்களது வாக்குச்சாவடியைக் கண்டறிவதும், இதர விவரங்களைத் தெரிந்து கொள்வதும் எளிதாகும்.

வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்களின் வசதிக்காக, வாக்குச்சாவடிகளில் கைபேசிகளை (Mobile Phones) ஒப்படைக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாக்குச்சாவடியின் நுழைவாயில் அருகே மிகவும் எளிமையான 'புறா கூண்டு போன்ற ' (Pigeon hole) பெட்டி அல்லது சணல் பைகள் அமைக்கப்படும்; அங்கு வாக்காளர்கள் தங்களது கைபேசிகளை பாதுகாப்பாக வைத்துச் செல்லலாம்.

இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற 'ECINET' என்ற ஒருங்கிணைந்த ஒற்றை இணையதளத்தைத் செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது. இதில் ஆணையத்தின் 40க்கும் மேற்பட்ட செயலிகள் மற்றும் இணையதளங்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வாக்காளர்கள் பின்வரும் சேவைகளைப் பெறலாம்,

வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்தல், வாக்காளர் அடையாள அட்டையில் (EPIC) திருத்தங்கள் மேற்கொள்வது, வாக்குப்பதிவு சதவீத விவரங்களைப் பார்த்தல், வாக்குச்சாவடி விவரங்களை அறிதல் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான உதவிகளைப் பெறுதல், தேர்தல் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுதல் போன்றவைகள் ஆகும். ECINET செயலியை கூகுள் பிளே ஸ்டோர் (Google Play Store) அல்லது ஆப்பிள் ஆப் ஸ்டோர் (Apple App Store) மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பணம், மதுபானம், போதைப்பொருள் மற்றும் இதர தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கண்காணித்துத் தடுக்க மாநிலம் முழுவதும் கண்காணிப்பு மற்றும் அமலாக்கக் குழுக்கள் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றன. 23 மார்ச் 2026 வரை பறிமுதல் செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

ரொக்கம் ரூ.230.53 கோடி, மதுபானம் ரூ.20.72 கோடி, போதைப் பொருட்கள் ரூ.26.47 கோடி, விலை மதிப்பயற்ற உலோகங்கள் (தங்கம்/வெள்ளி) ரூ.292.02 கோடி, இதர பொருட்கள்/ இலவசங்கள் ரூ.22.19. மொத்தம் ரூ.151.93 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.



மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் தொகுதி சார்பாக அலங்காநல்லூரில் நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது பிரச்சார பயணத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓ.பி.ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன், அவைத்தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், தொகுதி பொறுப்பாளர் சுப.த.சம்பத், கழக நிர்வாகிகள் கரு.தியாகராஜன், சேகர், தன்ராஜ், முத்தையன், அருண்குமார், பரந்தாமன், பாலராஜேந்திரன், பசும்பொன்மாறன், பொதும்பு தனசேகர், ரகுபதி, பால்பாண்டியன், மனோகரவேல் பாண்டியன், சத்தியபிரகாஷ், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், ஜெயராமன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத்தினர் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



சென்னை தெற்கு மாவட்ட தி.மு.கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் நாடிமுத்து தலைமையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அரங்கம்) நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், நொளம்பூர் வே.ராஜன், ஒன்றிய கழக செயலாளர்கள் அ.ம.துரைவீரமணி, கோவிலம்பாக்கம் வெங்கடேசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் த.ஜெகதீசன், மாவட்ட கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட துணை, தொகுதி, பகுதி மற்றும் வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்றனர்.